
பக்கங்கள் 20 + 07

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## ஒக்டோபர் 5 அல்லது 12 ஜனாதிபதித் தேர்தல்?



வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று ஐக்கிய

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 19 சனிக்கிழமை 01.06.2024 அதிர்வு 306



### தமிழ் மக்களை உசுப்பேத்தி எதுவும் செய்ய முடியாது

# பொது வேட்பாளர் விடயம் விரைவில் முடங்கிப்போகும்

### அடித்துக் கூறுகின்றார் சீ.வீ.கே.

(எஸ். நிதர்ஷன்)

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் யார் என்ற தெரிவிலேயே இந்த விடயம் முடங்கும். உசுப்பேத்தி எங்கள் மக்களை எதுவும் செய்ய முடியாது."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

04



## "சுமந்திரனின் ஊதுகுழல் நான் அல்லன்"

### சீ.வீ.கே. சீற்றம்

(எஸ். நிதர்ஷன்)

"சுமந்திரனுக்கு நான் குழல் ஊதவில்லை. அவரின் ஊதுகுழல் நான் அல்லன். என்னைக் கேட்டுத்

04

### வணிகவியல் பாடப் பிரிவில்

## யாழ். இந்து மகளிர் மாணவி மாவட்ட நிலையில் முதலிடம்



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

2023 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வணிகவியல் பாடப் பிரிவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவி கிர்த்திகா பத்மலோஜன் யாழ். மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்றுள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 90 மாணவிகள் விஞ்ஞான,

04

## பாலிதவின் கருத்தின் பின்னணியில் ரணில்?




"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரமே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, இரண்டு பிரதான தேர்தல்களையும் ஒத்திவைக்கும் கருத்துக்களை முன்வைத்திருக்க வேண்டும்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் பெரேரா தெரிவித்தார்.

04



# முன்னாள் போராளி குடும்பம் ஒன்றின் குடி தண்ணீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு

(கே.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம், பாவற்குளம் யுனிற் – 01 பகுதியில் உள்ள முன்னாள் போராளி குடும்பம் ஒன்றின் நீண்ட காலப் பிரச்சினையான வாழ்வாதாரம் மற்றும் குடி தண்ணீர் என்பவற்றுக்குத் தீர்வு காணும் முகமாகக் குடி தண்ணீர் திட்டம் ஒன்று நேற்று முன்தினம் (30) வழங்கக்பட்டது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட குறித்த முன்னாள் போராளி குடும்பம் ஊடக வியலாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளரான வன்னி மைந்தனின் முயற்சியால் லண்டனில் வசிக்கும் சட்டத்தரணி பிரியன் என்பவரின் நிதி உதவியில் 'ஊடக உறவுகளின் பாலம்' அமைப்பின் ஊடாக இந்த உதவித் திட்டம் வழங்கப் பட்டுள்ளது.

செட்டிகுளம், பாவற்குளம் யுனிற் 01 பகுதியில் இரண்டு பிள்ளைகளுடன் வசிக்கும் முன்னாள் போராளி குடும்பம் ஒன்று நீண்ட நாள்களாகக் குடி தண்ணீர் பெறுவதில் இடர்பாடுகளை எதிர் நோக்கி யிருந்தது.

வீட்டுடன் கூடிய வீட்டுத் தோட்டத் துக்கான காணிகள் இருந்தும் நீர் இல்லாமையால் வீட்டுத் தோட்டம் செய்ய முடியாது இருந்தது என்றும் போரில் காயமுற்ற கணவன் பல்வேறு இடர் பாடுகளை எதிர் நோக்கியிருந்தார் என்றும் அதற்குத் தற்போது தீர்வு கிடைத் துள்ளது என்றும் அவர்கள் தெரிவித் துள்ளனர்.

இந்தக் குடும்பத்தின் நீர்ப் பிரச்சனைக் குத்த தீர்வு காணும் முகமாக மோட்டருடன் கூடிய குழாய் கிணறு அமைத்து கொடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர்களான ந.கபில் நாத், கி.வசந்தரூபன், திருமதி சி. திவியா, சிவ.கஜன், வ.பிரதீபன் ஆகியார் இதனைக் கையளித்தனர்.





# சஜித் ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சர் யார்?

## முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் கருத்து

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே பொருத்தமானவர் என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் நீங்களா, பொன்சேகாவா என ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிட எதிர்பார்க்கவில்லை எனவும், தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்பட்டால் அதை ஏற்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் எனவும் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார். அதேவேளை, தேர்தல் ஒத்திவைப்ப தற்கான முயற்சி எடுக்கப்பட்டால் இந்த நாட்டில் மீண்டும் அராஜக நிலை ஏற்ப டக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் சாதித்த மாணவர் விவரம்

(ந.லோகதயாளன்)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கலைப் பிரிவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவி முதலிடத்தையும், வணிகப் பிரிவில் முழங்காவில் மகா வித்தியாலய மாணவி முதலிடத்தையும் பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி மாணவன் முதலிடத்தையும், விஞ்ஞானப் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி முதலிடத்தையும் பெற்றுள்ளனர்.

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் பளை மத்திய கல்லூரி மாணவன் முதலிடத்தையும், உயிரியல் தொழில்நுட்பப் பிரிவில் முழங்காவில் மகா வித்தியாலய மாணவன் முதலிடத்தையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:-

**கலைப் பிரிவு**

1ஆம் இடம் - சதாசிவம் கயல்விழி - 3 ஏ - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

2ஆம் இடம் - ஜெயக்குமார் கஜானி - 3 ஏ - முழங்காவில் மகா வித்தியாலயம்.

3ஆம் இடம் - தம்பையா மிதுஷா - 3 ஏ - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**வணிகப் பிரிவு**

1ஆம் இடம் - உதயராசன் நிருஜா - 3 ஏ - முழங்காவில் மகா வித்தியாலயம்.

2ஆம் இடம் - பரமேஸ்வரன் கோகுலதீபன் - 3 ஏ - முழங்காவில் மகா வித்தியாலயம்.

3ஆம் இடம் - ரவிச்சந்திரன் கமீலா - 3 ஏ - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**கணிதப் பிரிவு**

1ஆம் இடம் - சேகரன் சிவகுமரன் - 3 ஏ - வட்டக்கச்சி மத்திய கல்லூரி.

2ஆம் இடம் - அமலராஜா துஷாந்தன் - 3 ஏ - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3ஆம் இடம் - விஸ்வலிங்கம் பானுஜன் - 3 ஏ - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**விஞ்ஞானப் பிரிவு**

1ஆம் இடம் - மணிவண்ணன் ஷாகா - 3 ஏ - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

2ஆம் இடம் - சிறிதரன் கஜானன் - 3 ஏ - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

3ஆம் இடம் - லோகநாதன் திவாரகா - 3 ஏ - பளை மத்திய கல்லூரி.

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு**

1ஆம் இடம் - ரீ.றொனால்ட் - 2 ஏ, சி - பளை மத்திய கல்லூரி.

2ஆம் இடம் - முத்துராசா சீராளன் 3 சி - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

3ஆம் இடம் - கிருபாகரன் கரால்ட் பிரணவன் - பி, 2 எஸ் - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு**

1ஆம் இடம் - சண்முகலிங்கம் தேனுஜன் - ஏ, 2 பி - முழங்காவில் மகா வித்தியாலயம்.

3ஆம்இடம்-சங்கர்கார்த்திக்-பி,சி,எஸ் - கிளிநொச்சி மத்தியகல்லூரி.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## ஒக்டோபர்...

தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்று அமைச்சரவைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரியப்படுத்திவிட்டார். இராஜங்க அமைச்சர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போதும் இது பற்றி ஜனாதிபதி தெரியப்படுத்தினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பெரும்பாலும் சனிக்கிழமை நாளொன்றிலேயே தேர்தல் நடத்தப்படும். அந்தவகையில் ஒக்டோபர் 5 அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை." - என்றார்.

## யாழ். இந்து...

கலை, வணிகவியல் பாடப் பிரிவுகளில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று பல் கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளனர்.

வணிகவியலில் முதலாம் நிலை மற்றும் கலைத்துறையில் ஐந்தாம் இடம் உட்பட 24 பேர் 3 ஏ சித்திகளையும், 18 பேர் 2 ஏ, பி சித்திகளையும், 6 பேர் 2 ஏ, சீ சித்திகளையும் பெற்றுள்ளனர்.

## பாலிதவின்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"பாலித ரங்கே பண்டார ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர். எனவே, அவர் வெளியிடும் கருத்துக்கு மதிப்பு உள்ளது. அவர் வெளியிடும் அறிவிப்புக்களைக் கட்சியின் நிலைப்பாடாகவே கருத வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனவே, தனது பொதுச்செயலாளர் ஊடாக மேற்படி கருத்தை வெளியிட்டு சமூகத்தின் நிலையை அறிய அவர் முயற்சி எடுத்திருக்கக்கூடும்." - என்றார்.

அதேவேளை, நாட்டில் உள்ள அரசமைப்பு தொடர்பில் பாலித ரங்கே பண்டாரவுக்குப் புரிதல் இல்லை என்பதையே அவரின் அறிவிப்புக்கள் வெளிப்படுத்துகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

## பொது வேட்பாளர்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"நான் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மாறானவன். பொது வேட்பாளர் தேவையற்றது என அரசியல்வாதிகளுக்குள்ளேயே முதன் முதலில் எங்கட தரப்பில் இருந்து சொன்னவரும் நான்தான்.

அதாவது தமிழ்ப் பொது வேட்பாளர் சாத்தியமில்லை என்றும், அதற்கான காரணங்களையும் நான் கூறியிருக்கின்றேன். இப்பவும் சொல்கின்றேன் தமிழ்ப் பொது வேட்பாளர் யார் என்ற தெரிவிலேயே இந்த விடயம் முடங்கிப் போகும்.

கடந்த கால தேர்தல்களில் நாங்கள் நிரூபித்து வந்த மக்கள் ஆணை மலினப்படுத்தப்படும் என்ற கருத்தையும் கூறிக்கொள்கின்றேன். அதாவது கடந்த தேர்தலில் தேசியத்துக்கு விழுந்த வாக்கை எடுத்துப் பார்த்தால் அது புரியும். இப்ப மேலும் நாங்கள் பிளவுபட்டு இருக்கின்ற போது என்ன நடக்கும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்குத்தான் இவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்வைத்தார்கள் என்ற அந்தக் கருத்தில் நான் உடன்படவில்லை. இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை முதலில் பேசியது சுரேஷ் பிரேமச்சந்திரன்தான். அது அவரது நியாயமான கருத்து. அதனை நான் பிழை என்று சொல்லவில்லை. எனினும், அதில் நான் உடன்படவேயில்லை.

எங்களுடைய தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் கட்சி ரீதியாக இதுவரையில் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. ஆனாலும், கட்சி உறுப்பினர்கள் தனித்தனியே இது பற்றி பேசி வருகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுவில் நாங்கள் பேசியிருந்தோம்.

இந்த விடயத்தில் கட்சிக்குள்ளும் இரண்டு கருத்துக்கள் இருந்தன. அப்படி தொடர்ந்தும் இருக்கும். இல்லாமலும் போகலாம். எனினும், சில நேரத்தில் நீயும் சொல்லு, நானும் சொல்லுறேன் என்றவாறாகவும் இருக்கலாம்.

ஏனெனில் கட்சி முடிவெடுக்காமல் இருக்கின்றபோது கட்சி என்று சொல்லி சில பேர் தனித் தனியாகவும் பேசியிருக்கலாம். அப்படி பேசி இருப்பதாகத்தான் செய்திகளும் வருகின்றன. எனினும், கட்சி முடிவெடுக்காமல் இருக்கின்றபோது இதற்கான நேரம் வரும்போது பார்த்துக் கொள்வோம்.

மேலும் இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியைப் பணிய வைக்கலாம் என்று ஒருவர் சொல்லியிருக்கின்றார். இவரைப் போல் எத்தனையோ பேரை நாங்கள் கண்டிருக்கின்றோம். ஒரு பாரம்பரிய கட்சியைப் பற்றி அப்படியெல்லாம் பேசுவதா?

அதுமட்டுமல்ல யாழ்ப்பாணம் மக்களை உசுப்பேற்றி பணிய வைப்பதாகவும் கூறியிருக்கின்றார். அப்படி உசுப்பேற்றி யாழ்ப்பாணம் மக்களைப் பணிய வைக்க முடியுமா? ஏதோ கதைக்க வேண்டும் என்பதற்க்காக எங்கள் கட்சியைப் பற்றி எதையாவது கதைத்துவிட்டுச் செல்வதா?

உசுப்பேத்தி எங்கள் மக்களை எதுவும் செய்யலாம் என்று யாரும் சொல்வது தவறு. எதனையும் மக்கள் தீர்மானிப்பார்கள். சரியென்றால் ஏற்றுக்கொள்வார்கள் இல்லையென்றால் விலக்கி வைப்பார்கள். இதனைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்." - என்றார்.

## சுமந்திரனின்...

தமிழ்ப் பொது வேட்பாளர் கருத்துப் பரிமாற்ற நிகழ்வு தொடர்பில் சுமந்திரன் பேசவில்லை."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஏற்பாடு செய்துள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் சாதக - பாதக நிலைமைகள் தொடர்பில் ஆராயும் கருத்துப் பரிமாற்ற நிகழ்வு என்பது சதி நடவடிக்கை என்ற குற்றச்சாட்டு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இவ்வாறு கருத்துப் பரிமாற்றம் நடைபெறுவதாக ஊடகங்களில்தான் நானும் பார்த்தேன். எனக்கு இதைப் பற்றி எதுவும் தெரியாது. என்னுடன் எதுவும் சுமந்திரன் கதைக்கவும் இல்லை. இது தொடர்பில் எதுவும் சொல்லவும் இல்லை.

ஆனால், ஊடகங்களில் பார்த்தபோது இரண்டு தரப்பு கருத்துக்களும் பகிரப்படுவதாகத்தான் இருக்கின்றன. அப்படிச் செய்யலாம்தானே. எந்தவொரு விடயத்துக்கும் இரண்டு பக்கக் கருத்துக்கள் இருக்கும். இது இரண்டு அணிகள் என்றில்லை. இரு வேறு கருத்துக்கள் - நிலைப்பாடுகள்தான் இருக்கின்றன.

மேலும், அப்படி அணிகள் என்றால் எங்கள் கட்சிக்குள்தான் இருக்கின்றன. இந்த விடயத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் கூட தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றனர். அது தவறு என்று சொல்லவில்லை. அவ்வாறு தங்கள் தங்கள் கருத்துக்களை சொல்வது அவர்களது உரிமை.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் சாத்தியமற்றது என்று நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். அப்படி நான் கூறிப் பல நாட்களின் பின்னர்தான் சுமந்திரன் கூட இந்தக் கருத்தைக் கூறியிருந்தார். ஆனால், இப்போது நான் இதனைக் கூறினால் சுமந்திரன் சொல்வதை நான் கூறுவதாகவும், சுமந்திரனின் ஊதுகுழல் என்றும் என்னைச் சொல்லுவார்கள்.

ஆனால், உண்மை அதுவல்ல. நான் அவருக்குக் குழல் ஊதவில்லை. அதே நேரம் என்னைக் கேட்டும் தமிழ்ப் பொது வேட்பாளர் கருத்துப் பரிமாற்ற நிகழ்வு தொடர்பில் சுமந்திரன் பேசவும் இல்லை. அவருடைய கருத்தோ, என்னுடைய கருத்தோ எதுவாகவும் இருக்கலாம். அதேநேரம் மக்களின் கருத்து மாறுபட்டும் இருக்கலாம். அதற்காகக் கருத்து வேறுபாடுகள் இல்லாமலும் இல்லை."

- என்றார்.

# புத்தளம் மாவட்ட பொதுவான பிரச்சினைகள்; மாகாண ஆளுநர் தலைமையில் ஆராய்வு!



**(எம்.எம்.ஜெஸ்மின்)**

புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடலொன்று, குருநாகல் நகரில் அமைந்துள்ள மாகாண ஆளுநர் அலுவலகத்தில், வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது புத்தளம் தள மருத்துவமனையின் பௌதீக மற்றும் ஆளணி வளப்பற்றாக்குறை குறித்தும், கல்வி, மருத்துவம், உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பிலும் புத்தளத்துக்கான நிதி ஒதுக்கீடுகளின் குறைபாடுகள் குறித்தும் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தோர் கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

புத்தளம் மாவட்டத்தின் தலைநகரமாக புத்தளம் நகரம் காணப்பட்ட போதிலும் நாத்தாண்டிய, சிலாபம், மாரவில போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் புத்தளம் நகரில் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

புத்தளம் நகர மருத்துவமனையானது புத்தளம், முந்தல், கல்பிட்டிய வரையான பிரதேசங்களின் பொதுமக்கள் மற்றும் முப்படையினருக்கு மருத்துவ வசதிகளை வழங்குகின்றது. இருந்த போதிலும், புத்தளம் மருத்துவமனை ஏ தரத்திலான தள மருத்துவமனையாக இருந்தாலும் ஆதார மருத்துவமனைகளில் காணப்படும் வசதிகள் கூட அங்கு காணப்படுவதில்லை . இருதயநோய் சிகிச்சைப்பிரிவு எதுவித வசதிகளும் அற்ற சாதாரண சிறிய அறையொன்றுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கல்வித்துறை மட்டுமன்றி உட்கட்டமைப்பு அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் இதே புறக்கணிப்பு தொடர்கிறது என்று ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணில் - பஸ்ஸில் முரண்பாடு

தமது தற்போதைய ஆட்சிக் காலத்தின் அந்தத்தில் நிற்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

எந்த ஜனாதிபதியும் தமது முதலாவது ஆட்சி காலத்தின் முடிவில் அடுத்த தேர்தலுக்குத் தயாராக இருக்கின்றார், மீண்டும் வெல்ல வாய்ப்புண்டு என்ற நம்பிக்கையை ஏற்படுத்தத் தவறுவாராயின் அவரின் முதலாவது ஆட்சி காலத்தின் இறுதிக்கட்டம் பொலபொலத்து விடும். பிடி தளர்ந்து விடும்.

அதுதான், மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் போதும் நடந்தது. ஒரு பதவிக் காலத்துடன் தாம் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற யதார்த்தம் புரியத் தொடங்கியதும், யாரை எதிர்த்து அதிகாரத்துக்கு வந்தாரோ, அவரின் கால்களிலேயே விழாத குறையாக சமாளிப்புகளைச் செய்ய வேண்டியவரானார் மைத்திரி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலையும் இப்போது அதுதான். அடுத்த தேர்தலில் போட்டியிடுவதா, யாருடன் கூட்டுச் சேர்வது என்பவை குறித்தெல்லாம் முடிவெடுக்க முடியாமல் தடுமாறிக் குழப்பத்தில் நிற்கின்றார் அவர்.

ஒரு தீர்மானத்தை எடுக்காமல், மதில் மேல் பூனையாக அல்லாடும் ரணில் விக்கிரமசிங்கவின் போக்கு, அவரை ஜனாதிபதியாக்கி, இன்று வரை அவரது ஆட்சிக்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கும் மொட்டுக் கட்சிக்குக் கூட உச்ச எரிச்சலைத் தந்து விட்டதாகத் தெரிகின்றது.

மொட்டுக் கட்சியின் அந்த எரிச்சல் நிலைப்பாடு நேற்று அக்கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான வாராந்த அரசியல் சந்திப்பின் போது எதிரொலித்ததாக உள்வீட்டு வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

''ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 20 முதல் 25 எம்.பிக்கள் வரை உங்களுக்கு ஆதரவாக திரும்புவார்கள் என்றீர்கள். அது இன்னமும் நடக்கவே இல்லை. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா என்பது பற்றிய அறிவிப்பைக் கூட நீங்கள் விடுக்கவில்லை. உங்களுக்காக எமது மொட்டுக் கட்சியின் அரசியலையும் அதன் தேர்தலுக்கான நடவடிக்கைகளையும் நாம் அந்தரத்தில் தொங்க வைத்துக் கொண்டிருக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி பக்கத்திலிருந்து 20 முதல் 25 எம்பிக்கள் உங்கள் பக்கம் தாவுவர் என்றால் அதை வரும் ஜூன் 15 ஆம் திகதிக்குள் செயலில் காட்டுங்கள். தேர்தலில் போட்டியிடுவது பற்றிய உங்கள் முடிவையும் பகிரங்கப்படுத்துங்கள். இந்த விவகாரங்களில் உங்களின் நகர்வு காத்திரமாக இல்லாவிட்டால் ஜூன் 16ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கான எமது மொட்டுக் கட்சி வேட்பாளரை அறிவித்து நாம் அரசியல் நகர்வுகளைத் தொடங்கி விடுவோம்.'' - இப்படி பஸில் ராஜபக்ஷ நேற்று ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக - உறுதியாக - தெரிவித்து விட்டார் எனத் தெரிகிறது.

இதே போன்ற தகவல் ஒன்றை மொட்டுக் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் மூன்றாம் தரப்பு ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியப்படுத்தி இருக்கின்றார் என்று கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று இன்று காலையில் செய்தி வெளியிட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இருக்கும் தற்போதைய நிலையில் அப்படியே ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க வருகின்றமையை ஏற்கும் நிலையில் மொட்டுக் கட்சி இல்லை. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து காத்திரமான எண்ணிக்கைப் பிரமுகர்களைத் தனக்கு ஆதரவாகத் திரட்டிக் கொண்டு வந்தால் மட்டுமே ரணிலுடன் சேர்ந்து உழைப்பதன் மூலம் அவரை ஜனாதிபதியாக்கி தம் இலக்குகள், நோக்கங்களைத் தொடரலாம் என்று மொட்டு கட்சி பார்க்கின்றது.

நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு எம்.பியுடன் எஞ்சியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியையும், ரணில் என்ற பிரமுகரையும் மொட்டுக் கட்சியுடன் இணைப்பதன் மூலம் மட்டும் வெற்றி வாய்ப்பைப் பெற்று விட முடியாது என்ற யதார்த்தம் மொட்டுக் கட்சியினருக்கு நன்கு புரியத் தொடங்கிவிட்டது.

அதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இரண்டு வார கால அவகாசத்துடன் வாய்ப்பளித்து காத்திருக்கின்றது மொட்டுக்கட்சி.

இந்தப் பின்புலத்தில் அடுத்து வரும் இரண்டு வாரங்களும் இலங்கை அரசியலில் முக்கிய திருப்புமுனைக் காலம் என்று சொன்னால் அது மிகையாகாது.



# அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றுள்ள புகைத்தல், மது எதிர்ப்பு தின நிகழ்வுகள்

**(அஸ்ஹர் இப்றாஹிம், எம். எப். நவாஸ் )**

நாடு முழுவதும் சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தினம் நேற்றுக் (31) கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலிலும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் மற்றும் மேலதிக அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

மரதன் ஓட்டப் போட்டி, புகைத்தல் எதிர்ப்புக் கொடி விற்பனை, வீதி நாடகங்கள், விழிப்புணர்வு கருத்தரங்குகள் என்பன இடம்பெற்றன.

மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுகின்ற வீரருக்கு 15000 ரூபாவும் இரண்டாம் இடத்தை பெறுகின்ற வீரருக்கு 10000 ரூபாவும் மூன்றாம் இடத்தை பெறுகின்ற வீரருக்கு 7500 ரூபாவும் நான்கு மற்றும் ஐந்தாம் இடங்களை பெறுகின்ற வீரருக்கு தலா 5000 ரூபா வீதமும் வழங்கப்பட்டன. வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இவ்வாண்டுக்கான (2024) சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தொனிப்பொருளாக “நண்பா போதைக்கும் புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம், வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டி எழுப்புவோம்” என்பதாகும்.







# திண்மக்கழிவகற்றல் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புப் பாதணிகள் வழங்கப்பட்டன



(எம்.எப்.றிபாஸ்)

பொத்துவில் பிரதேச சபையில் திண்மக்கழிவகற்றலில் ஈடுபடும் தொழிலாளர்களின் நன்மை கருதி அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு பாதணிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு பொத்துவிலில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் வழங்கப்பட்ட இந்தப் பாதணிகளை பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் வைத்து டாக்டர் உவைஸ் பாறூக் வழங்கனார்.

பாதணிகளை தந்துதவிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் சஹீலா இஸ்ஸடீன், மற்றும் சுற்றாடல், தொழில் துறைகளுக்கு பொறுப்பான வைத்தியர் எ.எஸ்.எம். பௌசாட் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துள்ளனர்.





# பூண்டுலோயா விவேகானந்தா இந்துவுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

(தலவாக்கலை)

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கு இணங்க இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதப்பாண்டி ராமேஸ்வரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கொத்மலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பூண்டுலோயா விவேகானந்தா இந்துக் கல்லூரிக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் நேரில் சென்று இவற்றை வழங்கினார்.



இந்த நிகழ்வில் கொத்மலை வலயக் கல்வி பணிப்பாளர் பனாங்வில, பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் சமரசிங்க மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வட மாகாண குத்துச்சண்டைப் போட்டியில் வெற்றிவாகை சூடியது முல்லைத்தீவு!



(எம்.எம்.ஜெஸ்மின்)

வட மாகாண குத்துச்சண்டை போட்டியில் தங்க பதக்கங்களைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் சாதனை படைத்துள்ளார்.

கடந்த 25,26 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட வித்தியானந்தா கல்லூரி உள்ளரங்கில் போட்டி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டமானது 5 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும், 3 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளது. வவுனியா மாவட்டம் 3 வெள்ளிப் பதக்கங்களையும், 2 வெண்கலப் பதக்கங்களையும் கிளிநொச்சி மாவட்டம் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளன.

போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக உடையார்கட்டு, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, செல்வபுரம், உண்ணாப்பிலவு, கரைச்சிக்குடியிருப்பு, உடுப்புக்குளம், அளம்வில், தண்டுவான், பழம்பாசி, கற்சிலைமடு, கரிப்பட்டமுறிப்பு , மாங்குளம், பாண்டியன்குளம், கரும்புள்ளியான் போன்ற கிராமங்களை சேர்ந்த வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர்.





# கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரியில் ரூ. 5 மில்லியன் செலவில் உள்ளக வீதி!

## ஹரீஸ் எம்.பியின் டி-100 வேலைத் திட்டத்தில் ஆரம்பம்

**(சர்ஜூன் லாபீர், நூருல் ஹுதா உமர்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் டி-100 வேலைத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரியில் சுமார் 5 மில்லியன் ரூபா நிதியில் உள்ளக வீதியைக் காப்பெற் வீதியாக மாற்றுவதற்கான வேலைகளை ஆரம்பிக்கப்பட்டன. இதனை தனது டி-100 வேலைத் திட்டத்தின் முதற் கட்ட வேலையாகவும் அவர் ஆரம்பித்துள்ளார்.

இந்த நிகழ்வு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் அதிபர் ஏ.பி நஸ்மியா சனூஸ் தலைமையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்து கொண்டுடார்.

நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர்.ஜே.லியாக்கத் அலி, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். அஸீக், கல்முனை மாநகர பிரதி ஆணையாளர் ஏ.எச். அசீம், பொறியியலாளர் ஏம்.ஜெ. ஜௌஸி, சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.எம். ஜாபீர், கல்முனை பிரதேச வீதி அபிவிருத்தி நிறைவேற்றுப் பொறியலாளர் இசட். ஏ.எம்.அஸ்மீர், அம்பாறை மாவட்ட செயலக பொறியலாளர் ஏ.பி சாஹீர், கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம் ஜௌபர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் ஐ.எல். அஸீஸ், பழைய மாணவிகள் சங்கச் செயலாளர், மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# ஆங்கில நாவல் வெளியீடு

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

அஸ்மின் அப்துல்லா எழுதிய ஆங்கில நாவல் வெளியீட்டு விழா கொழும்பு பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

மூத்த ஊடகவியலாளர் ஏ.ஆர். லோசன் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கொழும்பு டி.எஸ் சேனாநாயக்க கல்லூரியின் தமிழ்ப் பிரிவின் ஓய்வுபெற்ற அதிபர் நஸ்லிமா அமீன், நூலாசிரியரின் தாயார் ஸனா அஸ்மின், ஓய்வுபெற்ற விங்கொமான்டர் சிபா ஹனிபா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.








# கோவிற்குடியிருப்பில் நடைபெற்ற இளைஞர் வெசாக் விழா நிகழ்வு!

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோவிற்குடியிருப்பு, உதயசூரியன் கிராமத்தில் தேசிய இளைஞர் வெசாக் விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

"போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து இளைஞர்களைக் காப்போம்" எனும் தொனிப்பொருளில் தென்மராட்சிப் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் அனுரதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வின் ஓர் அங்கமாக 14 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான விசேட செயலமர்வு இடம்பெற்றது. செயலமர்வில் வளவாளராக சட்டத்தரணி சனாதனசர்மா கலந்து கொண்டார்.

அதன் பின்னராக இடம்பெற்ற இளைஞர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் தேசிய வெசாக் தின நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் சுதாகர், சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பெரியசாமி, கோவில்குடியிருப்பு கிராம அலுவலர் சேந்தன், கோவிற்குடியிருப்புக் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தர்சன், மதுவன் சனசமூக நிலையத் தலைவர் மற்றும் உதயசூரியன் சனசமூக நிலைய உபதலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பிரதேச இளைஞர்களுடைய கலை நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு வைபவம் ஆகியன இடம்பெற்றன.






# மாணவர்களுக்கு புதிய சீருடை அறிமுகம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களின் சீருடையில் முதற் தடவையாக மாற்றம் ஏற்படுத்தும் விதத்தில் மாணவர்களுக்கான மேலங்கி அணிவிக்கும் நிகழ்வு அதிபர் ஏ.ஜீ.எம். நிசாத் தலைமையில் நேற்று முன்தினம் (30) இடம்பெற்றது.

அதிபரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கான முதலாவது மேலங்கி உத்தியோக பூர்வமாக அதிபரால் அணிவிக்கப்பட்டது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு காத்தான்குடியில்



(கே. எ. ஹமீட் )

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பேராளர் மாநாட்டை இந்த மாதம் 22 ஆம் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபத்தில் நடத்துவதற்கு கட்சியின் உச்சபீடம் தீர்மானித்துள்ளது.

இதற்கு அமைவாக அம்பாறை மாவட்ட பேராளர்கள் கலந்து கொள்வது தொடர்பான ஆலோசனை கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான யு.எல். அப்துல் மஜீட் தலைமையில் அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்றது.

இந்த நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் மன்சூர் ஏ காதர், கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை மற்றும் அம்பாறை மாவட்டக் குழுவின் செயலாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமா எ.ஏ.சி.சமால்டீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் 18 கிராமங்களில் அமைந்துள்ள 227 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்தும் பேராளர்களை அழைப்பது எனவும் பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளும் பேராளர்களை பிரதேச மட்ட அமைப்பாளர்களும் கிராமிய அமைப்பாளர்களும் கலந்துரையாடி பெயர்ப் பட்டியலை கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமுக்கு அனுப்பி வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.



# 42 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கல்

(மஸ்கெலியா )

நுவரெலியா, மாத்தளை மற்றும் கண்டி மூன்று மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு 42 புதிய பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாண தலைமை ஆளுநர் சட்டத்தரணி லலித் ஏ. கமகே தலைமையில் ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர்கள் நுவரெலியா, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் உள்ள மாகாண சபையின் ஆளுமைக்கு உட்பட்ட பாடசாலைகளில் உயர்தரப் பாடங்களைக் கற்பிக்கப் பணிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆசிரியர் நியமனம் மாகாண பாடசாலைகளில் தற்போதுள்ள ஆசிரியர் வெற்றிடங்களின் அடிப்படையில்



போட்டிப் பரீட்சையின் பின்னர் நடைமுறை மற்றும் நேர்முகத் தேர்வுகளின் பின்னர் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் குணதிலக ராஜபக்ஷ, நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் எஸ்.பி. திஸாநாயக்க, ஆளுநரின் செயலாளர் மஞ்சுள மதஹபொல, மாகாண முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் மேனகா ஹேரத், கல்வித் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி) அதுல ஜயவர்தன மற்றும்பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மாற்றத்தை உருவாக்குவோர் நாமாகவே இருக்க வேண்டும்!

## இன்னொருவரை எதிர்பார்க்கக் கூடாது என்கிறார் சபீஸ்

(நூருல் ஹுதா உமர்)

மாற்றத்தினை ஏற்படுத்த இன்னொருர் வருவார் என்று காத்திருக்கக் கூடாது. மாற்றத்தை உருவாக்குபவர்கள் நாமாகவே தான் இருக்க வேண்டும்.

இவ்வாறு அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவருமான எஸ்.எம் சபீஸ் இளைஞர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரப் உயிரிழந்து 24 வருடங்கள் கழிந்து விட்டன. இந்தக் காலப் பகுதிக்குள் உலகம் எவ்வளோவோ பரிணாம வளர்ச்சியை கண்டு விட்டது. ஆனால் நமது மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறவில்லை என்றால் அதற்கு என்ன காரணம் என்று நீங்கள் சிந்திக்க வேண்டும்.

நமது மூளை தொடர்ச்சியாக ஒன்றுக்குப் பழக்கப்பட்டு இருக்கின்றது. மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்



என்றால் அதற்கு மாற்றுக் கருத்தைத் தொடர்ச்சியாக நாம் மூளைக்கு வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

அதனால் இன்னுமொருவர் வந்து மாற்றத்தை ஏற்படுத்தி எமது மக்களின் வறுமையை போக்குவார்கள், அல்லது நல்ல நிலைமைக்கு கொண்டு வருவார்கள் என்று என்னும் கருத்துக்கு மாற்றமாக அந்த நபர் ஏன் நாமாக இருக்க கூடாது என்ற கருத்தை விதையுங்கள்.

புதிய தொழில் துறைகளை என்னால் உருவாக்க முடியும். என்னால் பல பேருக்கு தொழில் வழங்க முடியும் என்ற ஒருமைப்பாட்டை உருவாக்கி ஒன்றாக பயணிக்க முடியும்.

என்னால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும், அதனூடாக பிராந்தியத்தையும், நாட்டையும் உயர்த்த முடியும என்ற எண்ணத்தை விதைக்கும் முதல் ஆளாக எல்லோரும் மாறவேண்டும்.

அதனூடாக இன்னும் 10 வருடங்களுக்குள் எமது மக்கள் நிம்மதியாக வாழ்வதை நாம் நம் கண் முன்னே காணலாம்.- என்றார்.



# கோட்டைக்கல்லாற்றில் நடந்த கலாச்சார விளையாட்டு விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கோட்டைக்கல்லாறு பிறண்சிப் விளையாட்டு கழகத்தின் கலாசார விளையாட்டு விழா கோட்டைக்கல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் அந்தக் கழகத்தின் தலைவர் வில்வராஜா தலைமையில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாலப்பிள்ளை பிரசாந்தன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளரும், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளருமான தம்பிராசா தஜீவரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன் போது ஓட்டப்போட்டிகள், கயிறு இழுத்தல், தேங்காய் துருவுதல், கண்கட்டி முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல், வினோத உடைப் போட்டி என பல்வேறு கலாச்சார விளையாட்டு விழாக்கள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே. முரளிதரன், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெத்தினம், உட்பட மட்டக்களப்பு மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், ஆலய நிர்வாகிகள், கிராம மட்ட அமைப்புக்களின் நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# புத்தளம் கொத்தான்தீவு மாணவி மாவட்டத்தில் முதலிடம் பெற்றார்!



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ், ரஸீன் ரஸ்மின் )

உயர் தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் புத்தளம் மாவட்டத்தில் தமிழ்மொழி மூலம் கலைப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை கொத்தான்தீவு முஸ்லிம் மகாவித்தியாலய மாணவி மொஹமட் பஸ்லுல் பாரீஸ் ஹானிம் பெற்றுள்ளார்.

வரலாற்றில் முதன்முறையாக கொத்தான்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவி மாவட்டத்தில் முதலாம் இடம் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

எனவும் 3 ஏ சித்திகளை பெற்றுள்ளதுடன் இவரின் இஸட் புள்ளிகள் 2.1417 ஆகக் காணப்படுகிறது.

இவருக்குப் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், உயர்தர அபிவிருத்தி குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவ மாணவிகள் சங்கம், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், கொத்தாந்தீவு கட்டார் அமைப்பு, ஸதக்கத்துல் ஜாரிய அமைப்பு, கொத்தாந்தீவு குவைட் அமைப்பு, மாணவ, மாணவிகள் என சகலரும் தமது வாழ்த்துக்களைக் கூறியுள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் கே.டி ஹாறூன் தெரிவித்துள்ளார்.

# உயிரியலில் காத்தான்குடி மாணவன் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



வெளியாக உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் காத்தான்குடி முஸ்லிம் தேசிய பாடசாலை மாணவன் எம்.எம்.நஜ்முல் பதீக் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இவர் தேசிய ரீதியில் 18 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலைச் சமூகம் இவருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.

# உயிரியலில் ஸாஹிரா மாணவன் அம்பாறை மாவட்டத்தில் முதலிடம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சையின் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவன் பிர்தௌஸ் இஹ்ஸான் அஹமட் முதலிடம் பெற்றுள்ளார்.

வெளியிடப்பட்ட உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவன் உயிரியல் விஞ்ஞான துறையில் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்தி பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலாம் நிலையைப் பெற்றுள்ளார்.

இவர் தேசிய ரீதியில் 216 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

# ஞானச்சுடர் 317ஆவது இதழ் வெளியீடு!



யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம மாதாந்த ஆன்மீக வெளியீடான ஞானச்சுடர் 317 ஆவது இதழ் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினர் ஓய்வு பெற்ற அதிபர் சிவநாதன் தலைமையில் நேற்று (31) திருமுறை ஓதலுடன் ஆரம்பமாகி இடம்பெற்றது.

தொடர்ந்து வெளியீட்டு உரையை ஓய்வு பெற்ற கிராம சேவகர் சிற்சபேசன் நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து மதிப்பீட்டு உரையை யாழ்ப்பாணம் கல்லூரி ஆசிரியரும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினருமான துரை கணேசமூர்த்தி நிகழ்த்தினார்.

சிறப்புப் பிரதிகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி வழங்கினார்.

மதிப்பீட்டு உரையை சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர் துரை கணேசமூர்த்தி நிகழ்த்தினார்.











யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ள

# என்பு மச்சைச் சிகிச்சைப் பிரிவுக்கு 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி!

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது



யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்படவுள்ள என்பு மச்சை சிகிச்சை பிரிவுக்கு மருந்துகள் மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக தெண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 5லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அவர்களது கோரிக்கைக்கு அமைவாக இந்த நிதி போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தியிடம் வழங்கப்பட்டது.

நேற்று (31) வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற ஞானச்சுடர் 317 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வில் வைத்து இந்த நிதி கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுன்னாகம் பகுதியை சேர்ந்த ஒருவருக்கு மலசல கூடம் அமைப்பதற்காக இரண்டாம் கட்ட நிதியாக 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் அடியார்கள் கலந்து கொண்டனர்.

# சர்வதேச உயிர்ப்பல்வகைமை தினத்தில் சாய்ந்தமருதில் மரங்கள் நடும் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சர்வதேச உயிர்ப் பல்வகைமை தினத்தை முன்னிட்டு இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையில் சாய்ந்தமருது தொழிற் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் மரம் நடும் நிகழ்வொன்று அண்மையில் நடைபெற்றது.

இந்த நிழ்வில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் அதிகாரிகள், தொழிற் பயிற்சி நிலைய உத்தியோஸ்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# ‘நாட்டிய கலா மந்திர்’ மாணவிகளின் அரங்கேற்றமும் சலங்கை பூஜையும்

‘நாட்டிய கலா மந்திர்’ ஸ்தாபக இயக்குனர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகளான செல்வி அபிநேத்ரி கிரிசங்கர், செல்வி மஞ்சரி கிரிசங்கர் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றமும், செல்வி சாதுரி கிரிசங்கரின் சலங்கை பூஜையும் கடந்த 11 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம அதிதியாக ஓய்வு நிலை ஆளுனர் கே.சி. லோகேஸ்வரன், கௌரவ அதிதியாக பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடத்தின் அதிபர் அருட்சகோதரி சரிதா தண்டல்கே, கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன், சர்வதேச நுண்கலைக்கோவில் துறைத்தலைவர் சங்கர் கந்தசாமி, கலைச்செம்மல் பாலசுந்தரி பிராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.









# ‘நிருத்ய நர்த்தனாலய’ நடனப்பள்ளி மாணவியின் பரதநாட்டிய அரங்கேற்றம்

‘நிருத்ய நர்த்தனாலய’ நடனப்பள்ளி இயக்குனர் சாந்தி கணேசராஜாவின் மாணவி கவிதாஞ்சலி பாலகிருஷ்ணனின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த (19) ஆம் திகதி ஞாயிறுக்கிழமை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் நுவான் கோதாகொடவும் கௌரவ விருந்தினராக நர்த்தனாலய நடன இயக்குனர் திருமதி யசோதரா விவேகானந்தன், நாட்டிய கலா மந்திரின் நிறுவனரும் இயக்குநருமான திருமதி கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜனும் கலந்து கொண்டனர்.









# இறுதிக்கட்ட மக்களவை தேர்தல்: 57 தொகுதிகளில் வாக்குப்பதிவு

இந்தியா முழுவதும் 8 மாநிலங்களில் உள்ள 57 தொகுதிகளில் இறுதிகட்டமாக மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வரும் சூழலில், காலை 11 மணி நிலவரப்படி 26.30 வீத வாக்குப்பதிவாகியுள்ளது.

இந்தியா முழுவதும் மக்களவை தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. கடந்த ஏப்ரல் 19, 26, மே 7, 13, 20, 25 ஆகிய திகதிகளில் 6 கட்டங்களாக 485 தொகுதிகளில் தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

இந்த நிலையில், 7 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தில் இறுதி மற்றும் 7 ஆம் கட்ட மக்களவை தேர்தல் இன்று நடைபெறுகிறது. அதன்படி, உத்தர பிரதேசம் 13, பஞ்சாப் 13, மேற்கு வங்கம் 9, பிஹார் 8, ஒடிசா 6, இமாச்சல பிரதேசம் 4, ஜார்க்கண்ட் 3, சண்டிகர் 1 என மொத்தம் 57 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

காலை 11 மணி நிலவரப்படி 8 மாநிலங்களில் உள்ள 57 தொகுதிகளில் 26.30 வீத வாக்குப்பதிவாகியுள்ளது.

அதிகபட்சமாக இமாச்சல பிரதேசத்தில் 31.92 சதவீதம் வாக்குப்பதிவாகியுள்ளது. மேற்கு வங்கத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இருப்பினும் அங்கு வாக்குப்பதிவு பாதிக்கப்படவில்லை.

உத்தர பிரதேசத்தின் வாராணசி தொகுதியில் பிரதமர் மோடி 3 ஆவது முறையாக போட்டியிடுகிறார். உத்தர பிரதேசத்தின் மிர்சாபூரில் பா.ஜ.க. கூட்டணி கட்சியான அப்னா தளம்சார்பில் மத்திய அமைச்சர் அனுபிரியா, மேற்கு வங்கத்தின் டயமண்ட் ஹார்பரில் அபிஷேக் பானர்ஜி (திரிணமூல்), பிஹாரின் பாடலிபுத்ராவில் லாலுமகள் மிசா பார்தி (ஆர்.ஜே.டி), இமாச்சல பிரதேசத்தின் மண்டி தொகுதியில் மாநில அமைச்சர் விக்ரமாதித்யா (காங்கிரஸ்), பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத் (பா.ஜ.க), ஹமீர்பூரில் மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் (பா.ஜ.க) என 904 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.



இன்று மாலையுடன் மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைகிறது. அதைத் தொடர்ந்து, பல்வேறு ஊடகங்கள் சார்பில் கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியிடப்படும். இதன்மூலம் தேர்தல் முடிவுகள் குறித்து ஓரளவுக்கு ஊகிக்க முடியும்.

முன்னதாக, இன்று காலை கோரக்பூரில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்த உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் கருத்து தெரிவிக்கையில்,

“இது இந்தியாவின் ஜனநாயகத் திருவிழா. இன்று உத்தர பிரதேசத்தில் 13 தொகுதிகள் உள்பட 57 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகின்றது. மக்கள் முன்னால் பல்வேறு அரசியல் கட்சிகளும் தங்களின் கருத்துகளை முன்வைத்துள்ளன. தேர்தலில் வாக்களித்த மக்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடு முழுவதும் எங்களுக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார்க்கும் போது ஜூன் 4 எங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் நாளாக தெரிகிறது. அன்றைய தினம் மீண்டும் மோடி ஆட்சி அமையும்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2.5 மாதங்களாக பரபரப்பாக பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்தார். அவருடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும் இந்தியாவுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அவர் இந்தியப் பிரதமராக 10 ஆண்டுகள் சேவை செய்துள்ளார். உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பை அவர் உயர்த்தியுள்ளார்.

பிரதமரின் தற்போதைய தியானம் தேசத்துக்கானது. ஊழல், முறையற்ற நடத்தைகளில் ஈடுபடுவோருக்கும் அதன் முக்கியத்துவம் புரியாது. அதனைப் புரிந்து கொள்ள இந்தியா மீது, இந்தியாவின் மதிப்பீடுகள் மீது நம்பிக்கை வேண்டும்.” – என்றார்.

# வெற்றியின் முகட்டில் நிற்கிறது இண்டியா கூட்டணி; இறுதிக்கட்ட தேர்தல் நாளில் முதல்வர் ஸ்டாலின் பதிவு



இந்தியா முழுவதும் 8 மாநிலங்களில் உள்ள 57 தொகுதிகளில் இறுதிக் கட்டமாக மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வரும் சூழலில், ‘வெற்றியின் முகட்டில் நிற்கிறது இண்டியா கூட்டணி’ என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அவர் எக்ஸ் பதிவில் மேலும் குறிப்பிடுகையில்,

“பா.ஜ.கவின் பத்தாண்டுகால பாசிச ஆட்சியை வீழ்த்தி, இந்தியாவைக் காக்க உருவாக்கப்பட்ட இண்டியா கூட்டணி, மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து, வெற்றியின் முகட்டில் நிற்கிறது.

தன்னை எதிர்க்க யாருமே இல்லை என்ற மமதையில் இருந்த பா.ஜ.கவுக்கு எதிராக, ஜனநாயகச் சக்திகளின் மாபெரும் அணிதிரளாக அது அமைந்திருக்கிறது. இந்திய மக்கள் அனைவருக்கும் நம்பிக்கை தரும் அணியாக, தேர்தல் களத்தில் அமைந்திருக்கிறது.

தங்களது இடைவிடாத பரப்புரையின் மூலம் இண்டியா கூட்டணியின் முன்னணித் தலைவர்கள், பா.ஜ.க. உருவாக்கிய போலி பிம்பத்தை மக்கள் மன்றத்தில் உடைத்தெறிந்து இருக்கிறோம். இண்டியா கூட்டணியின் வெற்றிச் செய்திக்கு இன்னும் மூன்று நாள்களே உள்ளன.

வாக்கு எண்ணிக்கையின் போது அதிகமான விழிப்புணர்வுடன் இண்டியா கூட்டணி செயல்வீரர்கள் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். ஜூன் 4 – இந்தியாவின் புதிய விடியலுக்கான தொடக்கமாக அமையும். இது தொடர்பாக இண்டியா கூட்டணி தலைவர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் தி.மு.க. சார்பில் கழகப் பொருளாளரும் – நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு பங்கேற்கிறார். பாசிச பா.ஜ.க. வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்!” – என்று குறிப்பிட்டுள்ளார்.



# காசாவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் புதிய திட்டத்தை முன்மொழிந்தது இஸ்ரேல்

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிப்பு

காசாவில் நிரந்தர அமைதி ஏற்படுத்தும் விதமாக புதிய திட்டம் ஒன்றை இஸ்ரேல் முன்மொழிந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நேரம் இதுவெனவும் ஹமாஸ் இந்த போர் நிறுத்தம் முன்மொழிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பைடன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போரானது, பல மாதங்களாக நீடித்து வருகிறது, கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கர தாக்குதல்களை நடத்தியதுடன் பலரை பணயக் கைதிகளாகவும் பிடித்துச் சென்றது.

அதன் பின்னர் அந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் இன்றுவரை காசாவில் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அத்துடன், இந்த போர் காரணமான அதிகளவான மக்கள் பாதிப்படைந்துள்ளதுடன் ஆயிரகணக்கிலான பெண்கள் குழந்தைகள் உட்பட மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், காசாவில் நிரந்தர அமைதி ஏற்படுத்தும் விதமாக புதிய திட்டம் ஒன்றை இஸ்ரேல் முன்மொழிந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

மேலும், காசாவில் உள்ள மக்களுக்கு எதிரான போர் மற்றும் ஆக்கிரமிப்பை நிறுத்தினால் முழுமையான உடன்படிக்கைக்கு தயாராக இருப்பதாக ஹமாஸ் அமைப்பும் தெரிவித்துள்ளது.

# உலகம் முழுவதும் புகழ் பெற்ற 2 வயது சிறுவனின் ஓவியங்கள்



ஜெர்மனியை சேர்ந்த லாரண்ட் ஸ்வார்ஸ் என்ற 2 வயது சிறுவன் வரைந்த ஓவியங்கள் உலகம் முழுவதும் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளன.

சிறுவனின் ஓவிய ஆர்வத்தை அறிந்த அவனது பெற்றோர் சிறுவனுக்காகவே ஒரு பிரத்யேக இடத்தை ஒதுக்கி கொடுத்துள்ளனர்.

இந்த சிறுவன் குதிரைகள் போன்ற விலங்குகளின் ஓவியங்களை சிறப்பாக வரைந்துள்ளான்.

சிறுவன் வரைந்த ஓவியங்களை பார்த்து வியந்த அவனது தாயார் மகனின் படைப்புகளை வெளிப்படுத்த சமூக வலைத்தளத்தில் ஒரு தனி பக்கத்தை உருவாக்கியுள்ளார்.

அதில் குறித்த சிறுவன் வரைந்த ஓவியங்களை பதிவிட்டதுடன் அவற்றை பார்த்த ஆயிரக்கணக்கான பயனர்கள் சிறுவனின் ஓவிய திறமையை பாராட்டியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் முனிச்சில் நடந்த மிகப்பெரிய கண்காட்சியில் லாரண்டின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. இதன்மூலம் பிரபலமான அந்த சிறுவனின் ஓவியங்கள் 7 ஆயிரம் டொலருக்கு விற்பனையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனி ஆர்ப்பாட்டத்தில் கூரிய ஆயுதத்தினால் மக்கள் மீது தாக்குதல்; பொலிஸார் துப்பாக்கி சூடு



ஜேர்மனியில் வலதுசாரி ஆர்ப்பாட்டத்தின் போது, கூரிய ஆயுதத்தினால் தாக்குதல் நடத்திய நபர் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியில் அமைந்துள்ள தென்மேற்கு நகரமான மன்ஹெய்மில் உள்ள மத்திய ஆயசமவிடயவண சதுக்கத்தில் வலதுசாரி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நபர் ஒருவர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கூரிய ஆயுதத்தினால் தாக்கியுள்ளார்.

அந்த நபரின் தாக்குதலில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவரின் காலிலும், பொலிஸ் அதிகாரி ஒருவரின் கழுத்திலும் வெட்டுகாயங்கள் ஏற்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இதனை தொடர்ந்து, தாக்குதல் நடத்திய நபர் மீது மற்றொரு பொலிஸ் அதிகாரி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார். எனினும் அந்த நபரின் உயிருக்கு ஆபத்து ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், தாக்குதல் நடத்தியவரின் அடையாளம் அல்லது நோக்கங்கள் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை எனவும் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இடையே ஏற்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான விவரங்கள் பற்றி தெரிவிக்க முடியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பக்கங்கள் 07

கனடா முரசு

சனிக்கிழமை 01/06/2024

## சரக்கு ரயில் மூலமும் மனித ஆள் கடத்தல்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 01

கடந்த ஆண்டு நவம்பரில், அமெரிக்காவுக்குள் சரக்கு ரயில் ஒன்று கடப்பதை நிறுத்துமாறு அமெரிக்க எல்லை

C2



# டிரம்ப்புக்கு எதிரான தீர்ப்பு; கனடிய அரசாங்கம் மௌனம்

ஒன்ராரியோ, ஜூன் 01

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்புக்கு எதிராக நியூ யோர்க் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பு தொடர்பில் கனடிய அரசாங்கம் அமைதி காத்து வருகின்றது.

இந்த தீர்ப்பானது கட்சியின் அரசியல் அதிர்ஷ்டத்திற்கு சாதகமாக இருக்காது என்று கனேடிய கருத்துக்கணிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

C2

# சபாநாயகர் நாற்காலியில் அமரும் எம்.பிக்கள் பற்றி சர்ச்சைக் கருத்து

C2

ஒன்ராரியோ, ஜூன் 01

சபாநாயகர் நாற்காலியில் அமர்ந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாகுபாடான சமூக ஊடகப் பதிவுகளை இடுவதாக நாடாளுமன்ற தலைமைக் குழுவின் மூன்றாவது உறுப்பினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாற்காலியில் இருப்பவர்களின் நடுநிலைமை பற்றிய சச்சரவுகள் - மற்றும் கட்சிகளின் பாசாங்குத்தனம் - கோடை விடுமுறைக்கு முன்னரான நாடாளுமன்ற விவாதத்தில் முக்கிய இடம் வகுக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உதவி துணை சபாநாயகர் கரோல் ஹியூஸ் என்ற பட்டத்தை கட்சி இணையதளத்தில் நன்கொடை கோரும் பொத்தான்களுக்கு அருகில் வெளியிட்டதற்காக புதிய ஜனநாயகக் கட்சியை கன்சர்வேடிவ் கட்சியினர் கிண்டல் செய்துள்ளனர்.

மேலும் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு அதன் இணையத் தளத்தில் ஒரு செய்திக்குறிப்பில் அந்த பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டமையும் கூறப்பட்டுள்ளது.

கன்சர்வேடிவ் நாடாளுமன்ற உறுப்பினரின் துணை சபாநாயகரின் பாரபட்சமற்ற தன்மை குறித்த புதிய ஜன



நாயகக் கட்சியின் சொந்தக் கேள்விகளுக்கு பதிலளித்த கன்சர்வேட்டிவ் கட்சியினரின் இந்த கரிசனையை எழுப்பியுள்ளனர்.




# ஒலிம்பிக் மற்றும் பிற முக்கிய விளையாட்டு நிகழ்வுகள் இணையக் குற்றவாளிகளின் இலக்குகளாக உள்ளன!

## மத்திய பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரிக்கை

ஒன்ராரியோ, ஜூன் 01 - நடைபெறவுள்ள பரிஸ் ஒலிம்பிக் மற்றும் பிற முக்கிய விளையாட்டு நிகழ்வுகள் இணையக் குற்றவாளிகளின் இலக்குகளாக இருக்கின்றன என மத்திய பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இணையப் பாதுகாப்புக்கான கனேடிய மையம், இணையத்தில் செயல்படும் குற்றவாளிகள் முக்கிய விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ள அல்லது அருகில் உள்ள நிறுவனங்களை மிரட்டிப் பணம் பறிக்க முயற்சிப்பார்கள் என்று கூறுகிறது.

இணையக் குற்றவாளிகள் மின்னஞ்சல்கள் மற்றும் தீங்கிழைக்கும் வலைத்தளங்கள் மூலம் பார்வையாளர்கள் உட்பட தனிநபர்களை வலையில் சிக்க வைக்க முயற்சிப்பார்கள் என்று மையம் கூறியுள்ளது.

தள்ளுபடி செய்யப்பட்ட பொருள்கள், இலவச நிகழ்வு டிக்கெட்டுகள் அல்லது விளையாட்டு நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பிற்கான அணுகல் போன்ற வாக்குறுதிகளை பயன்படுத்தி மக்கள் ஏமாற்றப்படலாம் என்று இந்த மையம் எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

## டிரம்ப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த அமெரிக்கத் தேர்தலில் குடியரசுக் கட்சியினரை வழிநடத்திச் செல்வார் என்று எதிர்பார்க்கப்படும் டிரம்ப், வியாழன் அன்று நடந்த விசாரணையில் அனைத்து 34 குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளார்.

இந்த தீர்ப்புத் தொடர்பில் எந்த கருத்தும் இல்லை என்று பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது.

அதே நேரத்தில் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி இந்த இலையுதிர்கால தேர்தலுக்குப் பிறகு அமெரிக்காவை வழிநடத்துபவர்களுடன் இணைந்து கனடா பணியாற்றும் என்று தெரிவித்துள்ளார்.

'அமெரிக்கா எங்கள் அண்டை நாடு மட்டுமல்ல, நெருங்கிய நண்பர் மற்றும் நட்பு நாடு' என்று அவரது அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சரக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகவர்கள் அமைப்பு கனடாவிற்கு உத்தரவிட்டிருந்தது.

அதன் போதே, '13 மெக்சிகோ நாட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்' எனவும், பலர் 'ரயிலை நிறுத்த உத்தரவிடப்பட்ட பிறகு தப்பியோட முயன்றனர் எனவும்' ஹோம்லேண்ட் செக்யூரிட்டி ஏஜென்ட் டேவிட் ஸ்பிட்சர் ஒரு வாக்குமூலத்தில் கூறினார்.

ஆனால் மெக்ஸிகோவுடனான அமெரிக்க எல்லையில் இந்த காட்சி நடைபெறவில்லை - இது வான்கூவரின் தெற்கே இடம் பெற்றது.

அங்கு அமெரிக்க சட்டத்தரணிகளும் சட்ட அமலாக்க அதிகாரிகளும் பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்து மனித கடத்தலில் பெரும் அதிகரிப்பு பதிவாகுவதாகக் கூறுகிறார்கள்.






# டொரான்டோ பல்கலை கூடார விடயத்தில் நீதிமன்ற உத்தரவுடன் மட்டுமே நடவடிக்கை

## பொலிஸ் தரப்பில் தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 01

டொரான்டோபல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட பாலஸ்தீனிய சார்பு முகாம் மீது நீதிமன்ற உத்தரவுடன் மட்டுமே அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை காலை டொரான்டோ பொலிஸ் சேவை வாரியக் கூட்டத்தில், துணைத் தலைவர் ரொப் ஜான்சன், சட்டத்தை அமல்படுத்துவதற்கு அதிகாரிகள் பதிலளிப்பார்கள் மற்றும் தேவைப்படும் இடங்களில் பொதுப் பாதுகாப்பை நிலைநிறுத்துவார்கள், ஆனால் எந்த மேலதிக நடவடிக்கை களும் நீதிமன்றத்தின் திசையில் மட்டுமே வரும் என்று கூறியுள்ளார்.

'ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களுடைய வளாகத்தில் தங்குவதற்கு டொராண்டோ பல்கலைக்கழகம் அனுமதித்தது மற்றும் கியூபெக் நீதிமன்றத்தின் தீர்ப்பு, மெக்கில் பல்கலைக்கழகத்திற்கு இடைக்காலத் தடை உத்தரவு, சொத்துக்களுக்கு அத்துமீறல் சட்டம் ஆகியவை உட்பட, இன்றுவரை நிகழ்வுகள் வெளிப்பட்ட விதத்தில் ஒரு முகாமை அகற்றுவதற்கு டொராண்டோ பொலிஸ் சேவைக்கு போதுமான சட்ட அதிகாரத்தை வழங்கவில்லை' என்று ஜொன்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

'எனவே, சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லாததால், சட்டத்தை அமல்படுத்துவதற்கும் பொது பாதுகாப்பைப் பாதுகாப்பதற்கும் அல்லது நீதிமன்ற உத்தரவின்படி செயல்படுவதற்கும் அவசரநிலை சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளில் மட்டுமே டொராண்டோ பொலிஸ் சேவை செயல்படும்' என அவர் கூறியுள்ளார்.

# முன்னாள் கல்வி உதவியாளர் ஒருவர் மீது நீளும் பாலியல் தொடர் குற்றச்சாட்டுகள்




ஒன்ராரியோ, ஜூன் 01

ஒட்டாவாவைச் சேர்ந்த முன்னாள் கல்வி உதவியாளர் ஒருவர் பாலியல் வன்கொடுமை மற்றும் குறுக்கீடு ஆகிய மூன்று குற்றச்சாட்டுகளுக்கு முதன் முதலில் குற்றம் சாட்டப்பட்டி ருந்தார்.

இப்போது இவர் மீது மேலும் 14 பேர் தொடர்பில் 40க்கும் மேற்பட்ட புதிய குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.

32 வயதான கெவன் ஹென்ஷவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் பட்டியல் இப்போது சுமார் 50 ஆக உள்ளது.

அவை 17 சிறுவர்கள் மற்றும் ஆண்களை உள்ளடக்கியதாகக் கூறப் படும் குற்றங்களுடன் தொடர்பு டையவை.

இது தொடர்பில் வெள்ளிக்கிழமை காலை ஒட்டாவா பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில், ஜனவரி மாதம் ஹென்ஷ கைது செய்யப்பட்டபோது அவர்கள் முன்வைத்த - செப்டம்பர் 2022 காலவரிசையை விட - பல மாதங்களுக்கு முன்னதாக, ஜனவரி 2022 இல் குற்றங்கள் தொடங்கியுள்ளன என்று குற்றம் சாட்டுகின்றனர்.

பாலியல் வன்கொடுமை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகப் பிரிவைக் கொண்ட புலனாய்வாளர்கள், ஹென்ஷா இளைஞர்களுடன் பணியாற்றிய ஒட்டவா மற்றும் நோவா ஸ்கோடியாவில் இன்னும் பல பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என்று நம்புகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.



# போதைப்பொருள் பயன்பாட்டை அரசின் திட்டம் ஊக்கப்படுத்தும்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 01

பிரிட்டிஷ் கொலம்பியா அதன் போதைப்பொருள் கிரிமினல் குற்றமற்ற முன்னோடித் திட்டத்தை மீண்டும் அளவிடுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு, மத்திய அரசாங்கத்தின் சொந்த கருத்துக்கணிப்பு, பெரும்பா லான கனேடியர்கள் இந்தக் கொள்கை, போதைப்பொருள் பயன்பாடு அதிக ரிக்கவே வழிவகுக்கும் என்று அதிகாரிகளுக்கு பரிந்துரைத்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தை ஆதரிக்கும் மத்திய அசாங்க அதிகாரத்துவத்தின் பிரிவான பிரைவி கவுன்சில் அலுவலகத்தின் 11 பக்க கணக்கெடுப்பின் முடிவுகள், பணமதிப்பு நீக்கம் தங்கள் சமூகத்தை குறைவான பாதுகாப்பை ஏற்படுத்துமா என்பதில் கனேடியர்கள் பிளவுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கிறது.

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவப் பிரிவின் பேராசிரியரும் தலைவரும், பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஆராய்ச்சிப் பணிப்பாளருமான தோமஸ் கெர், '(குற்றம் நீக்கம்) போதைப்பொருள் பயன்பாட்டை எப்படியாவது செயல்படுத்தும் என்று மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நான் யூகிக்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

மேற்பார்வையிடப்பட்ட போதைப்பொருள் நுகர்வு தளங்கள் மற்றும் ஊசி பரிமாற்றங்கள் மீதும் இதே போன்ற கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன,

அவை அதிகரித்த பயன்பாட்டிற்கு வழிவகுக்கும் என்ற அச்சம் 'உண்மை' என கெர் கூறியுள்ளார்.



# வீடு கொள்வனவு நெருக்கடிகள் காரணமாக ரொறன்ரோவை விட்டு வெளியேறும் மக்கள்

கனடாவின் ரொறன்ரோ நகரை விட்டு பலர் வெளியேற முயற்சிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் வாழும் மக்கள் அங்கு வீடு கொள்வனவு செய்வதில் நிலவி வரும் சிரமங்கள் காரணமாக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

நிறுவனம் ஒன்றினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கருத்து கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கொள்வனவு இயலுமையைக் கொண்ட நகரங்களில் வீடு கொள்வனவு செய்ய ரொறன்ரோ நகரவாசிகள் முயற்சிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 900 கனடியர்களிடம் இது தொடர்பில் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

வீடுகளை கொள்வனவு செய்யக் கூடிய நகரங்களில் தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்வதற்கு அல்லது தொலைவில் இருந்து பணியாற்றக்கூடிய தொழில்களை பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

வீடுகள் குறைந்த விலையில் காணப்படும் நகரங்கள் நோக்கி நகர்வதற்கான முயற்சிகளையே ரொறன்ரோ பிரஜைகள் முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் செலவு கூடிய நகரங்களில் இருந்து செலவு குறைந்த நகரங்கள் நோக்கி நகர்வதற்கான முயற்சிகளே எடுக்கப்பட்டு வருகின்றன.




# கனடியப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில்...!

கனடிய பொருளாதாரம் இந்த வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் 1.7 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளிவிவரவியல் திணைக்களம் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, கனடிய வங்கி வட்டி வீதம் தொடர்பில் அடுத்த வாரம் அறிவிக்க உள்ளது.

பொருளாதார தரவுகளின் அடிப்படையில் வட்டி வீதம் தொடர்பிலான தீர்மானம் எடுக்கப்படும் என கனடிய வங்கியின் ஆளுனர் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

பணவீக்கத்திலும் சாதக மாற்றம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

# கனடிய அரசின் வரி விதிப்பை எதிர்க்கும் 93 வயது மூதாட்டி!




கனடாவில் 93 வயதான மூதாட்டி ஒருவர் அரசாங்கத்தின் வரி விதிப்பு நடைமுறைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

மகள் மற்றும் பேரப்பிள்ளைக்குத் தாம் பரிசாக வழங்கிய காணிகள் மீது பெருந்தொகை வரி விதிக்கப்பட்டதாக விசனம் வெளியிட்டுள்ளார்.

லிஸ் டியாசுன் என்ற 93 வயதான மூதாட்டியே இவ்வாறு வரி விதிப்பிற்கு எதிராக அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஒன்றாரியோவின் வார்க்வோர்த் பகுதியில் பண்ணையொன்றில் இந்த மூதாட்டி கடந்த 58 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு சொத்துக்கள் மீதும் அரசாங்கம் 40 ஆயிரம் டொலர்கள் வரி விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய வருமான முகவர் நிறுவனம் இந்த மூதாட்டிக்கு மூலதன வரி விதித்து கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

செல்வந்தர்கள் மீது வரி விதிப்பதாக கூறிய அரசாங்கம் தற்பொழுது தம் மீதும் வரி விதித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தாம் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டு வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் செல்வந்தர்கள் மீது அறவீடு செய்யப்படும் மூலதன வரியை தம் மீதும் விதித்துள்ளது நகைப்பிற்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.





# 49 பெண்களைக் கொன்று பன்றிகளுக்கு உணவாக்கிய கனடாவின் 'சீரியல் கில்லர்' சிறைத் தாக்குதலில் சாவு!

ஒட்டுமொத்த கனேடிய மக்களையும் நடுங்கவைத்த கொலைகாரன், சிறையில் சக கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்துள்ளான் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நபர் கடந்த 1990 முதல் 2000 ஆண்டு தொடக்கம் வரையில் கனடாவின் வான்கூவர் அருகே பல எண்ணிக்கையிலான பெண்களை தனது பன்றி பண்ணைக்கு அழைத்துச் சென்று படுகொலை செய்துள்ளதுடன், உடல் பாகங்களை பன்றிகளுக்கு உணவாக்கியுள்ளார்.

இந்த வழக்குகளில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த Robert Pickton மே 19 ஆம் திகதி சக கைதிகளால் தாக்கப்பட்டு காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

ஒட்டுமொத்த கனடாவையே நடுங்கவைத்த சில குற்றவாளிகளில் இவரும் ஒருவர். இவரது வழக்கு சர்வதேச ஊடகங்களில் தலைப்புச் செய்தியானது. தற்போது 74 வயதான ராபர்ட் பிக்டனை சக கைதி ஒருவர் தாக்கினார் எனப் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

ராபர்ட் பிக்டன் 6 பேரைக் கொலை வழக்கில் குற்றவாளி என நிரூபணமான நிலையில் கடந்த 2007 இல் ஆயுள் தண்டனைக்கு விதிக்கப்பட்டார். 26 பெண்களை கொலை செய்துள்ளார் என அவர் மீது வழக்குகள் பதியப்பட்டிருந்த நிலையில், 6 கொலைகளில் மட்டும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியிருந்தன.

சுமார் 22 ஆண்டுகளுக்கு முன்னர் வான்கூவர் புறநகர் பகுதியில் டசின் கணக்கான பெண்கள் திடீரென்று மாயமான சம்பவம் தொடர்பில் ராபர்ட் பிக்டனின் பண்ணையில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

அந்தப் பன்றி பண்ணையில் இருந்து 33 பெண்களின் உடல் பாகங்கள் அல்லது டி.என்.ஏ. மாதிரிகள் கண்டெடுக்கப்பட்டன. ஒருமுறை பொலிஸ் அதிகாரி என தெரியாமல் அவரிடம் தான் 49 பெண்களை கொன்றுள்ளார் என ராபர்ட் பிக்டன் உளறியுள்ளார். அது மட்டுமின்றி, பண்ணையில் நடந்த சம்பவங்களை நேரில் பார்த்த நபர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். ராபர்ட் பிக்டன் விவகாரத்தில் வான்கூவர் பொலிஸார் உரிய விசாரணை முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

மாயமான பெரும்பாலான பெண்கள் பாலியல் தொழில் செய்பவர்கள் அல்லது போதை மருந்துக்கு அடிமையானவர்கள் என்பதால் இந்த மெத்தனம் என்றும் கூறப்பட்டது.

ராபர்ட் பிக்டன் இதுவரை 49 பெண்களை கொன்று பன்றிகளுக்கு உணவாக்கினார் எனக் கூறியிருந்தாலும், 6 வழக்குகள் மட்டும் நிரூபிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதுடன் 25 ஆண்டுகளுக்கு பிணையும் மறுக்கப்பட்டது.







# கனேடிய பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர்ந்தோரின் பெரும் பங்களிப்பு



கனடாவில் புலம்பெயர்ந்தோரின் வருகையை கட்டுப்படுத்த முயற்சிக்கும் நேரத்தில், கனேடிய பொருளாதாரத்திற்கு புலம்பெயர்ந்தோரின் பெரும் பங்களிப்பை ஓர் அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (IRCC) வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கனடாவின் வணிக உரிமையாளர்களில் மூன்றில் ஒரு பங்காக புலம்பெயர்ந்த மக்கள்தான் உள்ளனர். அதாவது, வணிக உரிமையாளர்களில் 33 சதவீதம் அவர்கள்தான்.

அவர்கள் நாட்டின் கட்டுமானம், சுகாதாரம் மற்றும் சில்லறை வர்த்தகம் போன்ற துறைகளில் வேலைகளை உருவாக்குகிறார்கள் என்று IRCC கூறுகிறது.

இது 2021 கனேடிய மக்கள்தொகை கணக்கெடுப்பில் மேலும் பிரதிபலிக்கிறது. 8.3 மில்லியன் புலம்பெயர்ந்தோர் கனடாவை வீடு என்று அழைக்கிறார்கள், இது மொத்த மக்கள்தொகையில் சுமார் 23 சதவீதம் ஆகும்.

இருப்பினும், கனடாவின் குடியேற்றக் கொள்கையில் கொண்டுவரப்பட்ட சமீபத்திய மாற்றங்கள் இந்தியர்கள் குடியேறுவதை மிகவும் கடினமாக்கியுள்ளன.

கனடா, சர்வதேச மாணவர்களுக்கான two-year intake cap-ஐ நடைமுறைப்படுத்தியுள்ளது, மேலும் இலையுதிர்காலத்தில் தொடங்கும் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் திட்டங்களை சமீபத்தில் அறிவித்தது.

2023-ஆம் ஆண்டில் கனடாவினால் 37 சதவீதம் ஆய்வு விசாக்களை வழங்கப்பட்ட மிகப்பாரிய தேசிய கூட்டாளியாக இந்தியா உள்ளது.

படிப்பின் போது வாரத்திற்கு 20 மணிநேரம் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாலும், பட்டப்படிப்புக்குப் பிறகு வேலை தேட முடியாமல் போராடும் பல இந்திய மாணவர்களுக்கு இந்த மாற்றங்கள் சவால்களை உருவாக்கியுள்ளன.

கூடுதலாக, உயரும் விலைவாசி மற்றும் வரையறுக்கப்பட்ட நிரந்தர வதிவிட வாய்ப்புகள் மேலும் சிரமங்களை ஏற்படுத்துகின்றன.

சில வெற்றிக் கதைகள் இருந்தாலும், கனடாவில் உள்ள பல இந்தியர்களின் ஒட்டுமொத்த அனுபவம் நினைத்ததை விட குறைவாகவே உள்ளது, கணிசமான எண்ணிக்கையில் அவர்களது தகுதிகளுடன் ஒத்துப் போகும் வேலைகள் அல்லது பாதுகாப்பான நிரந்தர வதிவிடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், கனடா தனது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் புலம்பெயர்ந்தோர் வகிக்கும் முக்கிய பங்கை ஒப்புக்கொள்கிறது.

IRCC பல்வேறு துறைகளில் புலம்பெயர்ந்தோர் செய்யும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை சுட்டிக்காட்டுகிறது.

தங்குமிடம் மற்றும் உணவு சேவைகளில் 36 சதவீதத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள், போக்குவரத்து மற்றும் கிடங்குகளில் கிட்டத்தட்ட 38 சதவீதம் மற்றும் தொழில்முறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சேவைகளில் 34 சதவீதத்திற்கும் அதிகமானோர் புலம்பெயர்ந்தோர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீர்திருத்தத்தின் அவசியத்தை உணர்ந்து, கனேடிய குடிவரவு வழக்கறிஞர்கள் சங்கம் (CILA) குடிவரவு சட்டத்தில் மூலோபாய மாற்றங்களை முன்மொழிந்துள்ளது.

CILA ஒரு 'குடியேற்ற உரிமைகள் மசோதாவை' (Immigration Bill of Rights) அறிமுகப்படுத்தவும், IRCC மற்றும் Canadian Border Services Agency (CBSA) க்கு ஒரு குறைதீர்ப்பாளரை உருவாக்கவும் அழைப்பு விடுக்கிறது.